[1981 மார்ச் 24

நிலக்கடலைப் பயிரைத் தாக்கும் கம்பளிப் புழுக்களை ஒழிக்க மருந்து.

*வினா எண் 460— திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நிலக்கடலை செடிகளில் விழும் கம்பளிப் புழுக்களை ஒழிப்பதற்குப் பயன்படும் வகையில் மருந்துகள் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) இதன் காரணமாகப் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு நட்ட ஈடு வழங்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) நிலக்கடலைப் பயிரைத் தாக்கும் சிகப்பு கம்பளிப் பூச்சியைக் கட்டுப்படுத்த மருந்துகள் விவசாய கிடங்குகளிலும் தனியார் கடைகளிலும் போதிய அளவு கிடைக்கிறது.

(ஆ) விவசாயிகளுக்கு நட்ட ஈடு வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : துணைத் தலைவர் அவர்களே இந்தக் கம்பளிப் பூச்சி சிறிய பூச்சியாக இருக்கின்ற காலத்திலே தான் இறக்கிறது. செம்புழுவாக மாறுகிற நேரத்திலே அது செடியைத் தின்று குறிப்பிட்ட காலம் வாழ்ந்து தான் இறக்கிறது. அப்படி மாறிவிட்ட நிலையில் அவைகளை அழிப்பது கடினம் என்ற காரணத்தினால் அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நட்ட ஈடு கொடுப்பதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, நிலக்கடலை அதிகமாகப் பயிரிடப்படும் மாவட்டங்களான வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், பெரியார், கோவை மற்றும் மதுரை மாவட்டங்களில் பூச்சி மருந்து தெளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகின்றன. பயனடையும் விவசாயிகளுக்கு மருந்து மற்றும் அதை தெளிக்க ஆகும் செலவுகளில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படுகின்றது. ஒரு ஹெக்டேருக்கு மருந்துக்கு ஆகும் செலவு ரூபாய் 50 ஆகவும் மருந்து தெளிக்க ஆகும் செலவு ரூபாய் 30 ஆகவும் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மருந்து மற்றும் அதைத் தெளிக்க ஆகும் மொத்தச் செலவில் 50 சதவீத மானியத்தை கழித்து மீதியை இத்திட்டத்தைச் செயல்படுத்தும் மாவட்டங்களில் உள்ள பயன் அடைந்த விவசாயிகளிடமிருந்து கிஸ்தி மூலமாக வசூல் செய்யப்படுகின்றது. 1980—81 ஆம் ஆண்டில் 6,000 ஹெக்டேரில் இத்திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1981 மார்ச் 24]

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கடலையிலே விழுகின்ற புழுவை ஒழிக்க ஒவ்வொரு ஆண்டும் முயற்சி செய்தாலும் ஒழிக்க முடியவில்லை. மதுரை மாவட்டத்திலே உசிலம்பட்டி, திருமங்கலம் ஆகிய பகுதிகளிலே இதனால் விவசாயிகளுக்கு பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அறவே ஒழிப்பதற்கான முறையிலே விரிந்த முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளுமா ? இந்த ஆண்டு இருக்கின்ற பூச்சி முட்டையிட்டு அதிலிருந்து வருகின்ற பூச்சி அடுத்த ஆண்டு வளருகின்ற பயிர்களைப் பாதிக்கிறது என்ற காரணத்தினாலே பெரிய அளவிலே இதைப்பற்றி ஆராய்ச்சி செய்து அறவே ஒழிப்பதற்கான திட்டங்களைத் தீட்டிச் செயல்பட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அப்படிப்பட்ட ஆராய்ச்சி ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தக் கம்பளிப் புழு தாக்குவதை எப்படித் தடுப்பது என்பது பற்றியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. செ. செம்மலை : துணைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியிலே கம்பளிப் பூச்சி, பூச்சி இவைகளை ஒழிப்பதற்கு ஹெலிகாப்டர் மூலமாக மருந்து தெளித்ததன் மூலமாக ஏதாவது பலன் ஏற்பட்டதா ? அப்படியானால் யாருக்கு ஏற்பட்டது என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : இந்தப் புழுக்களைக் கொல்வதற்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளைப் பற்றி ஒன்றியங்கள் மூலமாக விவசாயிகளுக்குத் தெரிவிக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஒன்றியங்களின் தீர்மானத்தைப் பெற்றுத்தான் இந்த ஒட்டுமொத்த மருந்து தெளிப்பு முயற்சி நடைபெற்று வருகிறது.

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு எண்ணெய் வித்துக்கள் தட்டுப்பாடு உள்ள ஒரு பகுதி. நிலக்கடலை இங்கே பெரும் அளவுக்குப் பூச்சியினால் பாதிக்கப்படுகிறது. அரசு 50 சதவீதம் மானியம் கொடுத்து மருந்து தெளிக்கிற முயற்சியின் மூலமாகக் கிடைக்கிற பலன் குறைவாக இருக்கிறது. மதுரை மாவட்டத்திலே இதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். 1981—82 ஆம் ஆண்டிலே முழுச் செலவையும் அரசே ஏற்றுக் கொண்டு நிலக்கடலைக்குப் பாதுகாப்பு செய்யக் கூடிய முறையிலே ஏற்பாடு செய்து பலன் ஏற்படுகிறதா என்

பதை அரசு பரிசீலனை செய்து பார்த்து அடுத்து வருகிற நேரத்திலே தமிழ் நாட்டிலே எண்ணெய் வித்துக்களைப் பாதுகாக்பதற்கான முன் முயற்சிகளை எடுக்க முடியாதா ?

அது சம்பந்தமாக அரசு மீண்டும் மறு பரிசீலனை செய்து நிலக்கடலைக்குப் பாதுகாப்புக் கொடுக்க முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, எண்ணெய் வித்துக்களை அதிகமாக மேம்படுத்த வேண்டுமென்றுதான் அதற்காக இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கும், யோசனை நிதி ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள யோசனையாகும். அடுத்து வரும் ஆண்டுகளில்தான் அதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டும்.

திரு. இரா. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, நிலக்கடலைச் செடிகளில் விழும் கம்பளிப் புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தால் அளிக்கப்படும் அந்த மருந்தின் வீரியம் குறைவாக இருப்பதால் புழுக்கள் செடிகளிலே உண்டாகி, அதிலேயே வளர்ந்து அதன் மூலமாக முட்டையிட்டு மண்ணுக்குள்ளாக ஓராண்டு இருந்துவிட்டு, பிறகு கடலைச் செடியைப் போட்டவுடனே மண்ணிலேயிருக்கும் முட்டை வெடித்து பெரிதாக அந்தச் செடிகளுக்குப் பாதகமான நிலை உருவாகி விடுகிறது. ஆகவே, மண்ணுக்குள்ளே இருக்கும் அந்த மூல வித்தை எடுக்கின்ற திட்டத்தை அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கிண்டி—மேடவாக்கம் நெடுஞ்சாலை.

*வினா எண் 461—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கிண்டியிலிருந்து வேளச்சேரி வழியாக மேடவாக்கம் செல்லும் நெடுஞ்சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் உடனே பழுது பார்க்க அரசிடம் செயத் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இது குறித்து சென்னை மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS